DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 138/2024

PROSECUTION WITNESS No - PW-6

Name : சின்னப்பாண்டி Caste:

Father Name Calling:

Village: Religion:

Taluk: Age:

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of October 2024.

எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரில்லை. அவருக்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை :

1) எனக்கு சொந்த ஊர் பொட்டபாளையம் கிராமம் ஆகும். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 26.06.2014-ம் தேதி இரவு 11.30 மணி அளவில் எங்கள் ஊராட்சி மன்றத் தலைவர் இராமநாதன் என்பவரது மகன் கார்த்திக் போன் மூலமாக சந்திரசேகர் மூலிகை தோட்டத்திற்குள் ஒரு நபர் காயம்பட்டு கிடப்பதாகவும், அவரை 108 ஆம்புலன்சில் ஏற்றி மதுரை பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்வதற்கு எனது உதவியை நாடினார். அப்படி நான் பார்க்கும் போது சம்பவ இடத்தில் காம்பட்ட நபருக்கு இடது தலை, காது, தோள்பட்டை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டிருந்தது. அவரை 108 ஆம்புலன்சில் ஏற்றி சென்ற போது நான் அவருடன் உடன் சென்றேன். மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். மறுநாள் அதிகாலை 00.30 மணி அளவில் அவர் இறந்துவிட்டார். இது குறித்து காவல்துறை விசாரித்த போது நான் இந்த விவரத்தை சொன்னேன். பின்னால் விசாரித்து தாக்கிய நபர் யார் சிவக்குமார் என ஆந்திராவைச் சோந்தவர் என தெரிந்து கொண்டேன். நான் ஆம்புலன்சில் அழைத்து செல்லும் போது காயம்பட்ட சங்கரநாராயணனுக்கு சுயநனைவு இல்லை. பலத்த காயம். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதும் அவருக்கு சுயநினைவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

போலீசார் என்னை ஊரில் வைத்து 29.06.2014 அன்று விசாரித்தார். காலை 9.00 மணிக்கு விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரிக்கும் போது காயம்பட்ட சங்கரநாராயணை யார் தாக்கினார் என தெரியாது. அதன் பின்னர் தான்

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.15 17:38:12 +0530

தெரிந்துகொண்டேன். அதன் பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. போன் செய்து 10 நிமிடத்தில் நான் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றேன். நான் போன பிறகு தான் 108 ஆம்புலன்ஸ் வந்தது. ஆம்புலன்ஸ் வரும் இரவு 11.30 மணி இருக்கும். கார்த்தி போன் செய்யும் போது அங்கிருந்தார். ஒரு நபர் தாக்கிய விவரத்தை கார்த்தி என்னிடம் சொன்னார். யார் என்று நான் விசாரிக்கவில்லை. தெரியாத நபர் தாக்கியதாக தான் நான் மருத்துவமனையில் சொல்லி அனுமதித்தேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு 11.30 மணிக்கு சென்றதால் சம்பவம் 11.30 என மருத்துவமனையில் சொல்லியுள்ளேன். எனக்கு உண்மையிலேயே எதிரி யார் என்று தெரியாது என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.15 17:38:20 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 138 /2024

PROSECUTION WITNESS No - PW-7

Name : செண்பகமூர்த்தி Caste:

Father Name Calling:

Village: Religion:

Taluk: Age:

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of October 2024.

எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரில்லை. அவருக்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை :

1) நான் பொட்டபாளையம் கிராம உதவியாளராக கடந்த 2014-ம் ஆண்டு பணியில் இருந்தேன். அந்த சமயத்தில் எங்கள் ஊர் கிராம நிர்வாக அலுவலர் சந்திரசேகர். நாங்கள் இருவரும் அலுவலகத்திலிருந்த போது கடந்த 29.06.2014-ம் தேதியன்று காலை 7.00 மணியளவில் திருப்புவனம் காவல் ஆய்வாளர் கிராம நிர்வாக அலுவலருக்கு போன் செய்து மீனாட்சி இராமையா காம்பிளக்ஸ் அருகில் வரச்சொன்னார். இரகசிய தகவலின் பேரில் வழக்கு தொட்பாக ஒரு நபரை கைப்பற்றி விசாரிக்க வேண்டுமென குறிப்பிட்டார். அந்த காம்பிளக்சில் தங்கியிருந்த ஆந்திர மாநிலத்தை சார்ந்த ரமேஷ் என்பரது மகன் சிவக்குமார் என்பரை காவல்துறையினர் எங்கள் முன்னிலையில் விசாரிக்க அவர் வழக்கு சம்ப்வத்தை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் அளித்தார். அதனடிப்படையில் சந்திரசேகர் என்பவர் வழக்கு சம்பவ இடத்தை காண்பித்து சம்பவத்திற்கு பயன்படுத்திய இரும்பு கடப்பாரையை எடுத்து ஒப்படைத்தார். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ. 5, அ.சா.ஆ.6** கைப்பற்றுதல் மகஜர், ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கடப்பாலை **சா.பொ.1** ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

எனது அலுவலகம் பொட்டபாளையத்தில் அமைந்துள்ளது. பொட்டபாளையத்திலிருந்து திருப்புவனம் 20கிமீ என்றால் சரிதான். நானும் விஏஓம் தனித்தனி இருசக்கர வாகனத்தில் அங்கு சென்றோம். எதிரி மீனாட்சி இராமையா

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.15 17:38:30 +0530

காம்பிளக்சில் அறை எடுத்து தங்கியிருந்தார். அங்கு சென்றோம். நான் பொட்டபாளையத்தில் தங்கியுள்ளேன். எங்கள் பணியல்லாமல் அயல் பணிக்கு செல்ல வேண்டுமென்றால் தகவல் உயர் அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டுமென்றால் சரிதான். தகவல் தெரிவிக்கப்பட்டது. காம்ப்ளக்சில் சுமார் 10 அறை உள்ளது. எந்த அறையில் அவர் தங்கியிருந்தார் என்று எனக்கு தெரியாது. எதிரியை வெளியில் அழைத்து வந்து தான் விசாரித்தார்கள். நான் அறைக்குள் சென்று பார்க்கவில்லை. எதிரியை வெளியில் அழைத்து வந்து விசாரித்த விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். திருப்புவனத்திற்கு தனியாக கிராம நிர்வாக அலுவலர் உதவியாளர் உள்ளார்கள் என்றால் சரிதான். போலீசார் சொன்ன பிறகு தான் எனக்கு வழக்கு பற்றிய விவரம் தெரியும். எனக்கு இறந்து போனவர் இறந்தது குறித்து தகவல் முன்னமே தெரியும். போலீசார் விசாரணையில் 5ம் எண் அறையிலிருந்து கடப்பாரை கைப்பற்றப்பட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் எண் அறைக்கு பின் வெளியில் ஆயுதம் தூக்கி போட்டு சென்றுவிட்டார். 1ம் எண் அறைக்கு பின் வெளியிலிருந்து ஆயுதம் கைப்பற்றப்பட்டதாக கைப்பற்றுதல் மகஜரிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும், என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றும் பொருட்கள் கைப்பறப்படவில்லை என்றால் சரியல்ல. காம்ளக்சில் பொருட்கள் கைப்பற்றிய விவரம் தெரியும். போலீசார் விசாரணையில் கடைகள் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே காவல்நலையத்தில் வைத்து தயார் செய்த ஆவணத்தில் காவல் நிலையம் சென்று கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் தட்ட்ச்சு செய்யப்பட்டது. யார் தட்டச்சு செய்தது என்று ஞாபகமில்வை. எவ்வாறு தட்டச்சு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் கம்ப்யூட்டர் வைத்து தட்டச்சு செய்யப்பட்டது. பொட்டபாளையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன். திருப்புவனத்தில் எங்கு தட்டச்சு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது.

<u>மறு விசாரணை</u>. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN Digitally signed by SWARNAM J NATARAJAN Date: 2024.10.15 17:38:37 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை